மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி பிறப்பித்த ஆணை பேருந்து உரிமையாளர்களில் ஒருவர் செய்து கொண்ட மேல் முறையீட்டின் பேரில், சென்னையிலுள்ள மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தினல் தள்ளுபடி செய்யப்பட்டது.

Shore temples

* 763 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken by the Government to protect the shore temples from the ravages of the sea?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருச்செந்தூரிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலும், தரங்கம்பாடியிலுள்ள மாசில்லா நாதர் கோயிலும் கடல் அரிப்பினல் பாதிக்கப்பட்ட கடற்கரை கோயில்களாகும். கடல் அரிப்பைத் தடுப்பதற்காக, சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ரூ. 3.5 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாசில்லா நாதர் கோயிலுக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டு இக்கோயிலை அந்தக் கிராமத்தின் உட்பகுதிக்கு மாற்றுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, திருச்செந்தூர் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது, ஏனென்ருல் வருஷா வருஷம் மண் அரிப்பினல் பாதிக்கப்படுவதால், சர்க்கார் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் ஒதுக்கி ஏதாவது செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கடல் அரிப்பைத் தடுக்கின்ற வகையில் தூத்துக்குடி துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்து 3½ லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலை போதுமானது என்று அரசு கருதுகிற காரணத்தால் அந்த வேலையை நாம் மேற்கொண்டு இருக்கிறோம்.

1972 மார்ச் 28]

THIRU K. S. KOTHANDARAMIAH : Near the famous shore temple in Mahabalipuram it is stated in history books, that one more temple remains submerged in the sea. May I know whether investigation has been made to find out details of this temple submerged in water ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மகாபலிபுரம் கோவிலைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தமிழ் நாட்டில் கடல் அரிப்பினால் பாதிக்கப்படக் கூடிய கோவில்கள் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், தாங்கம்பாடியிலுள்ள மாசிலாநாதர் கோயில் ஆகிய இரண்டு கோயில்கள்தான் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட கடற்கரை கோயில்களாகும்.

திரு. த. சோணையா : தனுஷ்கோடி புயலால் அழிக்கப்பட்டதை நாடு அறியும். அருகில் இருக்கிற இராமேசுவரம் கோவிலுக்குப் பக்கத்தில் கடல் பொங்கி எழுகின்ற சில நேரங்களில் அலை கோவில் வரையிலும் தொட்டுச் செல்கிறது. அப்படியிருக்கிற சூழ்நிலையில் எப்பொழுதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அந்தப் பகுதி மக்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, தடுப்புச் சுவர் எழுப்பி, இராமேசுவரம் கோவிலுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோவிலைப் பொறுத்தவரையில் அது அந்தத் தீவினுடைய மத்தியிலே அமைந்திருக்கிறது. ஊரே அழியக்கூடிய நிலைமை ஏற்பட்டால் தான் கோவில் அழியக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, தடுப்புச் சுவர் கட்டவேண்டிய அவசியமில்லை. என்று நான் கருதுகிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : கடல் அரிப்பைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க எழு கோவில் பட்டணமான மாமல்லபுரத்தில் 6 கோவில்கள் கடலால் அழிக்கப்பட்டு விட்டன. இறுதியாக ஒரு கோவில் இருக்கிறது. அது கடல்